**[Nombre de Registro de Prueba: Clinical Trials.gov Identificador: NCT01509872.]**

**Sección Especial relacionada con el Ébola: reflexiones desde el terreno**

***Jefe de Redacción, Marian Tankink***

En esta *Sección Especial de Intervention*-la cual centra su mirada en el Ébola- seis trabajadores de la salud mental y profesionales psicosociales describen sus experiencias y el trabajo realizado en los países más afectados: Liberia y Sierra Leona. Sus informes de terreno y reflexiones personales son especialmente relevantes para dichas área de trabajo ya que hasta el momento son escazas las investigaciones "*basadas en la evidencia*" sobre los programas, formaciones u otros enfoques que han sido implementados. Por lo tanto, las experiencias en terreno de estos autores y sus reflexiones sobre su trabajo son tanto más valiosas para comenzar a construir nuestra base de conocimientos, para ayudar a informar y dar forma a intervenciones futuras y en consecuencia, para que dichas intervenciones sean lo más eficaces posible. La penetrante descripción de la Autora *Teresa González* relata cómo las medidas implementadas para combatir el Ébola en Sierra Leona están creando profundo temor entre las comunidades afectadas resaltando que esta problemática ha sido prácticamente ignorada hasta este momento. *Janice Cooper* escribe un apasionante informe de cómo las experiencias personales interactúan con eventos colectivos y sociales en Liberia. En su informe de campo *Eliza Cheung* explica las problemáticas psicosociales que ha registrado en Liberia tales como el miedo en las comunidades locales y entre los trabajadores de ayuda humanitaria, los rumores, la estigmatización y las medidas de salud que entran en conflicto con las prácticas tradicionales comunitarias. *Ferdinand Garoff* también aborda estas temáticas del miedo y la estigmatización en Sierra Leona y explica cómo se tratan de abordar estas cuestiones con la ayuda de la movilización social y el empoderamiento de los mensajes construidos. También presta atención al aspecto esencial de la atención del personal de trabajo. Estos temas del cuidado de personal de trabajo, el apoyo y la formación también son abordados por *Elín Jonasdottir* en su informe de terreno en Sierra Leona el cual hace hincapié en la gran presión a los que se ven sujetos quienes trabajan en el campo de ayuda humanitaria, siendo ellos y ellas provenientes de comunidades y familias profundamente afectadas y estando en constante riesgo de infección. Como psiquiatra *Peter Hughes* hace hincapié en los problemas de salud mental y los riesgos (también en el largo plazo) y pone de relieve la salud mental de los niños que sobreviven a este periodo traumático. Además, aborda temáticas de atención personal de trabajo y el hecho que, como resultado del miedo, los trabajadores internacionales de salud pueden experimentar un tipo de estigmatización al regresar a sus países de origen después de su misión.

**Palabras clave:** Ebola, miedo, estigma, apoyo psicosocial, salud mental, cuidado de personal de trabajo

# Summaries in Tamil

**உயிர்தப்பியிருக்கும் ஜின்ராஸ் ( ஒன்றாக) பெருநாட்டில் யுத்தத்தின்பின் கீஷ்சுவா பழங்குடிப் பெண்களின் மீள்திறன்பற்றிய கற்கை**

***Eliana Barrios Suarez***

யுத்தத்தில் உயிர்தப்பிப் பிழைத்தவர்களில் நடாத்தப்படும் ஆய்வுகள் அதிகமாக அவர்களது பாதிப்புகள்பற்றிக் கருத்திலெடுக்கின்றனவே அல்லாது அவர்களது மீள்திறன்பற்றிப் பார்ப்பதில்லை. இந்த ஆய்வு பெருவின் ஆயுத முரண்பாடுகளின் பின் (1980-2000) பழங்குடி



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

கீஷ்சுவாப் பெண்களின் மீள்திறனுக்கு பங்களிக்கும் காரணிகள்பற்றி ஒரு குறுக்கு ஆய்வின் (cross sectional) மூலம் ஆராய்கின்றது. (n=15). சமூக அமைப்புகளில் தொடர்ச்சியான ஈடுபாடு, யுத்தத்தின்பின் இடம்பெயர்ந்து மீளத்திரும்புவர்களின் நிலைப்பாடுகள், போன்றன உயர் மீள்திறனுடன் தொடர்புபட்டவையாகக் காணப்பட்டன. அதற்கு மாறாக குறைந்த கல்விநிலை, ஊதியமற்ற தொழில், மற்றும் யுத்தத்தின்போது பாலியல்வன்முறைக்கு முகம்கொடுத்தல் என்பன குறைந்த மீள்திறனுடன் தொடர்புபட்டவையாகக் காணப்பட்டன. யுத்ததத்தின்பின் பெண்களின் மீள்திறனை மேப்படச்செய்ய கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு என்பவற்றில் பால்நிலைப் பேதமையை குறைத்தல் மற்றும் குடிமை சமூகத்ததை மறுபடியும் உயிர்ப்பிக்கக்கூடிய கொள்கைகள் போன்றன இன்றியமையாத காரணிகளாகும் என்று இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் பரிந்துரைக்கின்றன. அதுமட்டுமல்லாது கீஷ்சுவாப்பெண்களின் மீள்திறன் சக்தியானது மிகவும் பாரதூரமான கஷ்டநிலையில் துடிப்பான எதிர்புதன்மை மற்றும் தைரியம் போன்ற தெளிவான உதாரணங்களால் தெளிவுபடுவதுடன் முக்கியமாக அவர்களது அரசியல் செயலூக்கத்துடனான தொடர்புடன் இணைந்ததாகவும் காணப்படுகின்றது.

**முக்கிய சொற்பதங்கள்**: மீள்திறன் . கீஷ்சுபாப் பெண்கள், பெரு

---

மனநெருக்கத்தினை அளிவிடுவதற்கான அளவீட்டுக் கருவிகளையும் இவ்வாறான நிலைப்பாடுகளில் மேற்கொள்ளப்படும் உளசமூகத் திட்டங்களில் வெளிப்பாடுகளை அல்லது விளைவுகளை மதிப்பிடுவதற்கான கருவிகளிற்குமனா தேவையினை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான சவால்களைக் கருத்தில்கொண்டு இந்த ஆயவறிக்கை நீண்டகால மனநெருக்கீடு மற்றும் இன்னல்களை அளவிடுவதற்கு தலைமுடி கோர்ரிசோல் செறிவளவினை அளவிடுதலைப் பரிந்துரைக்கின்றது. இந்த அளவீட்டு முறையானது உளசமூக திட்டங்கள், ஆய்வுகளுடன் மேலும் ஒரு அளவுசார் கணிப்பீடாக இணைக்கப்படும்பொழுது மனநெருக்கத்தின் தன்மைபற்றி ஒரு கூடுதலான புரிதலைத் தரலாம். கோர்ரிசோல் செறிவளவு போன்ற எந்தவொரு உயிரியல் அளவீட்டு முறையும் நெறிமுறை மற்றும் நடைமுறை வினாக்களை ஏற்படுத்தும். அவற்றையும் இந்த ஆய்வு கணக்கிலெடுக்கின்றது. அத்துடன் 'dp no harm' நிலை தலைமுடி கோர்ரிசோல் செறிவள்வினை எடுத்தல் என்னும் முடிவிற்கு மேலாக முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும்.

**முக்கிய சொற்பதங்கள்**: பயோமேக்கர் , நீண்டகால மனநெருக்கீடு, தலைமுடி கோர்ரிசோல் செறிவளவு, மனதநேய, அளவீடு, நீண்டகால இடம்பெயர்வு, உளசமூகம்.

---

## இன்னல்களை அளவிடல்: நீண்டகால மனநெருக்கீட்டினை மனிதநேய நிலைப்பாடுகளில் தலைமுடி கோர்ரிசோல் மூலம்( Hair Cortisol) அளவிடல்

*Tim Cunningham*

எப்பொழுதும் அதிகரித்துச் செல்லும் மனிதநேய இடர்கள் நீண்டகால இடம்பெயர்வுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இது நீண்டகால அல்லது புரையோடிய மனநெருக்கீட்டிற்கு ஊக்கியாகும் என்பது பொதுவாக அறியப்பட்ட விடயமாகும். அதனால் மனிதநேயப் பணிகளில் மிகவும் அதிகளவில் நீண்டகால மனநெருக்கீடுபற்றி பார்க்கப்படவேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. இதன்காரணமாக நீண்டுகொண்டு செல்லும் இடம்பெயர்வுகளின்போது நீண்டகால

---

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கொன்கோலிய இளைஞர்களுடன் மனவடு நோக்கியதும் மனவடு நோக்கற்றதுமான இடையீடுகள்: எழுந்தமானமான பூர்வாங்க ஆய்வு

*Paul O'Callaghan, John McMullen, Ciarán Shannon & Harry Rafferty*

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு இடையீடுகள் தேவை என்பதில் பரந்த உடன்பாடு காணப்பட்டாலும் அதுபற்றிய குறைந்த ஆய்வுகளும், எவ்விதமான இடையீடுகள் அதிக பலனைத்தரும் என்பதில் மிகக் குறைவான உடன்பாடுகளுமே காணப்படுகின்றன. ஆகவே, இந்த கட்டுரை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கொங்கோலிய இளைஞர்களுடனான மனவடு சார்ந்த மனவடு சாராத இடையீடுகள் பற்றி ஒரு எழுந்தமானமான ஆய்வினை அளிக்கை செய்கின்றது



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

ஐம்பது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, அதிலும் மிகப்பாரதூரமான வாழ்வியல் அனுபவங்களுக்கு முகம்கொடுத்தவர்களை எழுந்தமானமாக மனவடு சார் புலனுணர்வு சார் நடத்தை சிகிச்சைக்கு அல்லது மனவடு சார்பற்ற உளசமூக இடையீடுகளுக்கு ( பிள்ளை சிநேக இடங்கள்) பிரித்துவிடப்பட்டனர். சிகிச்சை முறைகளில் பயிற்றப்படாத, கொங்கோலிய இலகுபடுத்துனர்கள் குழுக்களை இலகுபடுத்தினர். வசதிக்கான ஒரு காத்திருக்கும் மாதிரிக்குழுவும் உருவாக்கப்பட்டது. blind assessors மூலம் பங்குபற்றுனர்கள் தனித்தனியாக இடையீடுகளுக்கு முன்பும், பின்பும் நேர்முகம் காணப்பட்டனர். அத்துடன் யுத்தத்திற்குப் பின்னான நெருக்கீடு பற்றிய சுய அறிக்கை மற்றும் அதனை உள்வாங்கும் குணம்குறிகள் என்பவற்றைப் பாவித்தும் மற்றும் நடத்தை பிறழ்வுகள், சார்பு சமூக நடத்தையை பாவித்தும் 6 மாத பின்தொடர் செய்பாடுகளும் நடாத்தப்பட்டன. இரண்டு சிகிச்சை பெற்ற குழுக்களும் கட்டுப்பாட்டு குழுவுடன் (Control group) ஒப்பிடும்பொழுது குறிப்பிடும்படியான முன்னேற்றங்களைக் காட்டின. 6 மாத கால பின்தொடர் செயற்பாடுகளில் பிள்ளைநேயத் திட்டத்துடன் தொடர்புபட்ட குழுவே குறிப்பிடும்படியான மாற்றத்தினை சமூகம் சார் நடத்தைகளில் காட்டியது. இந்த ஆய்வு மனவடு சார்ந்த மற்றும் மனவடு சாராத இரண்டு திட்டங்களுமே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்களில் உளவியல் மனநெருக்கத்தினைக் குறைக்க துணைபோகின்றன என்ற முடிவிற்கு வருகின்றது.

**முக்கிய சொற்பதங்கள்**: கட்டிளம்பருவத்தினர், பிள்ளை நேய இடங்கள், உளசமூக இடையீடுகள், கொங்கோ சனநாயக சோசலிசக் குடியரசு, மனவடு நோக்கிய புலனுணர்வு சார் நடத்தை சிகிச்சை

[Trial Registry name: Clinical Trials.gov Identifier: NCT01509872.]

**இபோலா தொடர்பான விசேட பகுதி: களத்திலிருந்தான பிரதிபலிப்பு**

*Editor in Chief, Marian Tankink*

இபோலா பற்றிய இந்த விசேட பகுதியில் ஆறு மனநல மற்றும் உளசமூக உத்தியோகத்தர்கள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளில் தமது அனுபவங்கள், தமது வேலை என்பவை பற்றிக் கூறுகின்றனர்: லைபீரியா, சிரலியோன். கள அறிக்கைகளும் சுயபிரதிபலிப்புகளும் குறிப்பிட்ட கள நிலமைகளுக்குப் பொருத்தமானவையாக உள்ளன. எனினும் குறிப்பட்ட செயற்திட்டங்களின் பலன்கள் பற்றி 'சான்று சார் ஆய்வுகள்' எவையும் செய்யப்படவில்லை. இக் கள உத்தியோகத்தர்களின் சொந்த அனுபவங்களே இவ்வாறான செயற்திட்டங்கள் பற்றிக் கற்றுக்கொள்ள எமக்கிருக்கும் ஒரே தகவல்களாகும். இவற்றின் அடிப்படையிலேயே வருங்கால திட்டங்களை வடிவமைக்க வேண்டிவரும். இபோலாவை முறியடிப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் சில மக்கள் மத்தியில் பீதியை எழுப்பியதாக எழுத்தாளர் Teresa Gonzalez தெரிவிக்கிறார். இவ்வாறான கவனத்திற்கெடுக்கவேண்டிய விடையங்கள் இது வரை வெளிவரவில்லை. லைபீரியாவில் எவ்வாறு தனியாட்களின் அனுபவங்கள் சமூக சம்பவங்களுடன் பின்னிப்பிணைந்துள்ளது என்று Janice Cooper கூறுகிறார். Eliza Cheung தனது கள அறிக்கையில், தான் அவதானித்த உளசமூகப் பிரச்சினைகளான பயம், மூடநம்பிக்கைகள், வதந்திகள் போன்றவற்றை விபரிக்கிறார். உளவியலாளரான Peter Hughes குறிப்பாக இந்த இக்கட்டான சூழ்நிலையில் அகப்படும் குழந்தைகளின் மனநலன் பற்றியும், தொழிலாளர்களின் நலன்பற்றியும், பயம் காரணமாக இப் பிரதேசத்தில் வேலை செய்யும் சர்வதேச சேவகர்கள் நாடு திரும்பும் போது புறந்தள்ளி வைக்கப்படல் பற்றியும் எழுதுகிறார்.

**முக்கிய சொற்கள்:** இபோலா, பயம், புறந்தள்ளப்படல், உளசமூக உதவி, உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.